இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 23 ISSUE 02 FEBRUARY -2023 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-



# தேவனை விற்றுப்போட்டவர்கள்

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிகை இப்பொழுது **Digital** முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN

# ISRAEL - BIBLE LAND TOUR 2023

சகோதரர் L.வின்செண்ட்ராஜ் அவர்களுடன்



## இஸ்ரேல், ஜோர்டன் & எகிப்து

## மே 1 - 10

10-நாட்கள்

எங்களோடு வேதாகம தேசத்திற்கு வாருங்கள்



- தினமும் அதிகாலை பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் நிறைந்த ஆராதனை
- யோர்தான் நதிகரையில் ஆராதனை
- ஆண்டவர் இயேசு ஊழியம் செய்த இடங்கள்
- அவர் அற்புதம் செய்த பரிசுத்த ஸ்தலங்கள்
- கெத்செமனே தோட்டத்தில் ஜெப நேரங்கள்
- பத்து கற்பனைகளை பெற்ற சீனாய்மலை
- கலிலேயா கடலில் தேவனை துதித்தல்
- நைல் நதியில் படகு சவாரி

**9442800449**

தொடர்புக்கு — 9442800449, 9442800447, 9498000449.

உங்களுடைய பாஸ்போர்ட் நகலை அனுப்பி முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.
(சென்னையில் இருந்து புறப்பட்டு சென்னை வரும் வரை அனைத்து செலவுகளும் உட்பட)

**ஒரு நபருக்கு**
**ரூ. 1,30,000/ மட்டுமே**

www.jesuslives.in

# ஆசிரியர் மடல்

ஆண்டவராகிய
இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில்
அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாத இதழ்
வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த
மகிழ்ச்சியடைகிறேன். கர்த்தர் நல்லவர் அவர் கிருபை
என்றுமுள்ளது. இந்த வருடத்திலே தேவன் நமக்கு கொடுத்த வாக்கு-
த்தத்தத்தின்படி நீங்கள் பலுகவும்,பெருகவும், நிரப்பவும் வேண்டுமென்றவர்
அப்படியே நம்மை ஆசீர்வதித்து வழிநடத்தி வருகிறார். கடந்த ஜனவரி 1-ஆம்
தேதி செம்பட்டியில் நடைபெற்ற புத்தாண்டு ஆசீர்வாதக் கூட்டத்தில்
தேவனுடைய ஆவியானவர் அளவில்லாமல் அசைவாடினார், வந்திருந்த
ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர். மேலும் வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப
மையத்தில் இந்த வருடத்திலிருந்து தொடர் உபவாச ஜெபங்கள் தேவனுடைய
அநாதி தீர்மானத்தின்படி 2 நாட்களாக மாற்றியமைத்து ஜனவரி மாதத்திலிருந்து நடத்த
தேவன் கிருபை செய்தார். இந்த ஜெபத்திற்கு வெளியூர்களில் இருந்து வருகிறவர்கள்
அங்கே வந்து தங்கி ஜெபிக்கலாம். தேவனுடைய மகிமையும், வல்லமையும்
வெளிப்படும்படி ஜெபிக்கிறோம் செயல்படுகிறோம். நீங்களும் கலந்து கொள்ள
முயற்சியுங்கள். கர்த்தருக்குச் சித்தமானால் திருப்பத்தூரில் மூன்று நாள் பரிசுத்த உபவாச
முகாம் பிப்ரவரி 2,3,4 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது, இதில் வழக்கம் போல் எல்லா
தேவ ஊழியர்களும் கலந்து கொண்டு ஜெபத்தை நடத்த இருக்கிறோம். கர்த்தருடைய
கிருபையினால் சோஸியல் மீடியாவில் நடைபெறும் எல்லா ஊழியங்களையும் தேவன்
அளவில்லாமல் ஆசீர்வதித்து வருகிறார். இப்பொழுது நம்முடைய மாத இதழ் டிஜிட்டல்
முறையில் வாட்ஸ் ஆப், **இணையதளத்தில்**, இ மெயில் மூலமாகவும் அனுப்பப்படுகிறது.
நீங்கள் அதை டவுன்லோடு செய்து படிக்கலாம். தொடர்ந்து வெளியூர்களில் அதிக
சுவிசேஷ கூட்டங்கள் இருப்பதால் கர்த்தருடைய நாமம் மகிமைப்படவும், அவருடைய
வல்லமை, வரங்கள் எங்கள் மூலம் வெளிப்படவும் எங்களுக்காக
ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்கள் ஜெபத்தாலும்,
காணிக்கையினாலும் இந்த ஊழியத்தை தாங்கி, உதவ
மறவாதிருங்கள். ஊழியம் வளரும் போது அதன் தேவைகளும்
அதிகமாகிறது. கர்த்தருடைய மாறாத கிருபை நம் அனைவரோடும்



*இயேசுவின் பணியில்,*

L. Vincent Raj

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)



# தேவனை விற்றுப்போட்டவர்கள்

சகோ.L.வின்சென்ட்ராஜ்

**லோத்தினுடைய நாட்களில் நடந்தது போலவும் நடக்கும், ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கன், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள். லூக்கா 17:28.**

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கர்த்தர் தாமே இந்த செய்தியின் மூலமாக உங்களோடு இடைபடுவாராக. நாம் வாழும் இந்த கடைசி காலத்தில் நம்பிக்கையற்ற இந்த உலகத்தில், மனிதனுடைய கட்டுப்பாட்டை இழந்த, ஊசலாடிக் கொண்டிருக்கிற இந்த உலகில், தேவனுடைய வார்த்தை மாத்திரமே நமக்கு ஆறுதல். வானமும், பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தையோ ஒழிந்து போவதில்லை என்று இயேசு சொன்னார். அப்படிச் சொன்ன இந்த வார்த்தைகளை நாம் கூர்ந்து கவனித்து அதிலே நடக்க, நாம் செவி கொடுத்தால் நிச்சயமாக நாம் பிழைப்போம், வாழ்வோம். ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்த போது பல போதனைகள், பிரசங்கங்களைச் செய்தார். நடந்தவை, நடந்து கொண்டிருப்பவை, இனி நடக்கப்போகின்ற, சம்பவிக்கப் போகின்ற காரியங்களை நமக்கு பிரசங்கித்தார். அப்படி பிரசங்கித்தப் போதனைகளில் ஒன்று தான் லோத்தின் நாட்கள். லோத்தின் நாட்கள் செல்வ செழிப்பாய் வாழ்ந்த நாட்கள். காரணம் அவன் ஆபிரகாமை விட்டு பிரிந்து போனபோது பொன் விளையும் பூமியையும், வசதி வாய்ப்பு உள்ள இடங்களையும் தெரிந்துகொண்டார். ஜனங்கள் சுகபோக பிரியர்களாய் வசதி வாய்ப்புகளை தங்களுக்கு என்று பெருக்கிக் கொண்டார்கள். உண்டார்கள், குடித்தார்கள், புசித்தார்கள், வாங்கினார்கள், விற்றார்கள், கட்டினார்கள்.



www.jesuslives.in

செல்வ செழிப்பாய் வாழ்ந்த நகரம் ஒரே நாளில் தேவனுடைய கோபத்திற்கு உள்ளாகி, பாவத்தின் கொடூரம் கட்டுப்படுத்த முடியாமல் போனபடியால் தேவகோபம் அவர்கள் மேல் இறங்கியது. நடந்தது என்ன? வானத்திலிருந்து கந்தகமும், நெருப்பும் இறங்கி அந்த சோதோம் கொமோரா பட்டணங்களை அழித்துப்போட்டது. மனிதனுடைய பல நாள், பல வருஷங்களின் வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வந்தது. அதில் தப்பிய ஒரே ஒரு குடும்பம் லோத்துவும், அவனுடைய இரண்டு மகள்களும் தான். தன் மனைவியை கூட காப்பாற்ற முடியாமல் போனான். காரணம் உன் ஜீவன் தப்ப ஓடு திரும்பி பார்க்காதே என்று தேவன் எச்சரித்தார். ஆனால் லோத்தின் மனைவியோ அதை அசட்டைபண்ணி திரும்பிப் பார்த்து உப்பு தூணாய் மாறிவிட்டாள். தன் ஜீவனை இழந்து போனாள். இயேசு சொன்னார் லூக்கா 17:31-ல் அந்த நாளிலே வீட்டின் மேலிருப்பவன் வீட்டிலுள்ள தன் பண்டங்களை எடுத்துக்கொண்டு போக இறங்காமல் இருக்கக்கடவன், அப்படியே வயலிலிருக்கிறவன் பின்னிட்டுத் திரும்பாமலும் இருக்கக்கடவன் என்றார். இன்றைக்கு அதே அக்கினி கந்தகம் நிறைந்த உலகில் தான் நாம் வாழ்கிறோம். 2 பேதுரு 3:7-ல் இப்பொழுது இருக்கிற வானங்களும், பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது. லோத்தின் நாட்களில் எச்சரிக்கப்பட்டது போலவே இன்றைக்கும் முழு உலகத்தையும் தேவன் எச்சரித்தும், தங்கள் பொல்லாத கிரியைகளை விட்டு மனந்திரும்பி தேவனைத் தேடவும், அவருடைய இரக்கத்தை பெறவும் கட்டளையிடுகிறார். ஆனால் ஜனங்கள் கேட்கவோ, மனந்திரும்பவோ இல்லை தங்கள் பொல்லாத கிரியைகளை விட்டு மனம் திரும்பாமல் உண்ணவும், குடிக்கவும், சம்பாதிக்கவும், விற்கவும், வாங்கவும், என்ன படிக்கலாம், என்ன சம்பாதிக்கலாம் என்று இதிலே சிந்தனையாய் இருந்து அழிவின் ஆபத்தை உணராமல் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். 2 இராஜா 5:26-ல் எலிசா தன் உடன் ஊழியக்காரன் கேயாசியைப் பார்த்து பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும், ஒலிவத்தோப்புகளையும், திராட்சத் தோட்டங்களையும் ஆடுமாடுகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா? என்றான். என் இருதயத்தில் இந்த செய்தியை எழுதும்படி தூண்டிய வார்த்தை இது தான். இது வாங்குகிறதற்கும், விற்கிறதற்கும் உண்டான காலம் அல்ல. உள்ளது போதும் அதாவது இருக்கிறதே போதும் என்று, நாம் உலகத்தின் மேல் கவனம் வைக்காமல் தேவனைப் பார்த்து ஓட நம்மை அர்ப்பணிக்க வேண்டும், வாழப்பழக வேண்டும். இதைத்தான் புதிய ஏற்பாட்டிலே யோவான் ஸ்நானகன் பிரசங்கித்தார். அவருடைய பிரசங்கத்தைக் கேட்ட ஆயக்காரர், ஜனங்கள் மற்றும் போர் சேவகர்கள் நாங்கள் என்ன செய்ய வேண்டும், இந்த இயேசுவை ஏற்றுக்கொள்ள அவரை அடைய, அநுபவிக்க என்ன செய்ய வேண்டும் என்றபோது லூக்கா 3:10-15 முடிய உள்ள வசனத்தில் நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமலும், பொய்யாய்க் குற்றஞ்சாட்டாமலும் உங்கள் சம்பளமே போதுமென்றும் இருங்கள் என்றான். காரணம் இனி உங்கள் காலம் குறுகியது. 1 கொரி 7:29-31 வரை உள்ள வசனத்தில் இவ்வுலகத்தின் வேஷம் கடந்து போகிறதே என்றார். ஆகவே இனியும் நாம் காலத்தை வீணடிக்காமல் தேவன் நமக்கு தந்த ஜீவனை, இந்த கொரோனா காலத்தில் நம்மை உயிரோடே பிழைக்க வைத்த, வாழவைத்த ஆண்டவராகிய இயேசுவுக்காக வாழவும், ஜீவிக்கவும் நம்மை அர்ப்பணித்து, நம் ஜீவனை இரட்சிக்கவும், வரும் கோபாக்கினைக்கு நாம் தப்புவிக்கப்படவும் நமக்கு கிருபையாய் கொடுக்கப்பட்ட காலங்களையும், நேரங்களையும் சரியாய் பயன்படுத்தி, தேவையில்லாத காரியங்களில் ஈடுபடாமல், உள்ளது போதும் என்ற மனநிறைவோடு தேவனைப் பின்பற்றி, இது வாங்குகிறதற்கும் விற்கிறதற்கும் காலம் அல்ல என்பதை உணர்ந்து நடக்க வேண்டும். அதைத்தான் இயேசு லூக்கா 17:28-ல் லோத்தின் நாட்களில் நடந்தது போலவும் நடக்கும். ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள் நட்டார்கள், கட்டினார்கள்

இன்றைக்கும் முழு உலகத்தையும் தேவன் எச்சரித்தும், தங்கள் பொல்லாத கிரியைகளை விட்டு மனந்திரும்பி தேவனைத் தேடவும், அவருடைய இரக்கத்தை பெறவும் கட்டளையிடுகிறார்.

என்றார். இது விற்கிற காலம் அல்ல, வாங்குகிற காலமும் அல்ல. கடன்வாங்கி மாதம் மாதம் தவணை கட்டுவதற்காக இரவும், பகலும் உழைத்து, பிள்ளைகளை குடும்பத்தை மறந்து நாடு விட்டு நாடு போய் சரியான சாப்பாடு இல்லாமல் தங்கள் பெலத்தை வீணடித்து விசனப்படுகிற காலமும் அல்ல. ஒன்றும் இல்லாத இஸ்ரவேல் ஜனங்களை வனாந்திரத்தில் நாற்பது வருஷம் அற்புதமாய் வழி நடத்திய தேவன் உன்னை நடத்தப் போதுமானவராய் இருக்கிறார். அவர் உன் தேவைகளை சந்திப்பார். உனக்கு என்ன வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார். அவர் உன்னை அற்புதமாய் நடத்துவார். ஆச்சரியமான காரியங்களைச் செய்வார். போகட்டும் எதையெல்லாம் ஜனங்கள் விற்றார்கள், யாரை எல்லாம் தேவன் விற்றுப்போட்டார், நாம் இன்றைக்கு எதை வாங்க வேண்டும் என்பதை பார்க்கப் போகிறோம்.

## தேவன் ஜனங்களை விற்றுப்போட்டார்

**அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலின் மேல் கோபமூண்டவராகி, அவர்கள் அப்புறம் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக்கூடாதபடி கொள்ளையிடுகிற கொள்ளைக்காரர் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்து, அவர்களைச் சுற்றிலும் இருக்கிற அவர்கள் பகைஞரின் கையிலே விற்றுப்போட்டார். நியாயதி 2:14.** மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமின் கையிலே விற்றுப் போட்டார். நியா 3:8, 4:2, 10:7-ல் பெலிஸ்தரின் கையில் விற்றுப் போட்டார். அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்து போகிற போது அவர் அவர்களை ஆத்சோரின் சேனாபதியாகிய சிசெராவின் கையிலும், பெலிஸ்தரின் கையிலும், மோவாபிய ராஜாவின் கையிலும் விற்றுப்போட்டார் 1 சாமு 12:9. மேற்சொன்ன வசனங்களில் எல்லாம் தேவகோபம் ஜனங்களின் மேல் வரும்போது எல்லாம், ஜனங்கள் தேவகோபத்திற்கு ஆளானபோது எல்லாம், தேவன் அவருடைய ஜனங்களை பகைஞரின் கையிலும், கொள்ளைக்காரர் கையிலும், பெலிஸ்தரின் கையிலும் உக்கிரமான ராஜாக்கள் கையிலும் விற்றுப்போட்டார். அவர்கள் ஜனங்களை அடிமைப்படுத்தி, நாடுகடத்தி, அவர்களுடைய உடமைகளை அபகரித்து, சித்தரவதை செய்து வேதனைப்படுத்தினார்கள். ஜனங்கள் எவ்வளவு சம்பாதித்தும், உழைத்தும் முன்னேற முடியாமல் கசக்கி பிழியப்பட்டார்கள். காரணம் ஜனங்கள் கர்த்தரைத் தேடாமல், அவர் நியமித்த வழிகளில் வாழாமல் முரட்டாட்டமாய், இருதயக்கடினத்தோடு உலகத்தை அநுபவிக்க வேண்டும், நாகரீகத்தை அனுபவிக்க வேண்டும், பணம் சம்பாதிக்க வேண்டும், வீடு வாசல்களை, நகைகளை சேர்த்து வைக்க வேண்டும் என்று இரவும் பகலும் இம்மைக்குறியவைகளையே சிந்தித்து தேவனுக்கு ஏற்றவைகளை சிந்திக்காமல், மனிதனுக்கு ஏற்றவைகளையே சிந்தித்து, மாம்ச சிந்தையினாலே தேவனுக்கு பகைவராக, சத்துருவாக மாறிவிட்டார்கள். எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களாக மாறிவிட்டார்கள். அதனால் தேவ கோபம் உண்டாகி தேவன் அவர்களை சீர்கேடுகளுக்கும், உலகத்தின் காரியங்களைச் செய்ய விற்றுப் போட்டார், மறந்துபோனார். அதனால் தான் இந்த ஜனங்கள் மேல் தேவகோபம் எழும்பி இருக்கிறது. **யோவான் 3:36-ல் தேவனுடைய கோபம் அவர்கள் மேல் நிலை நிற்கும் என்று சொல்லப்பட்டுள்ளது.** ஏன் வேசித்தனங்கள், ஏன் விபச்சாரங்கள், ஏன் குடிவெறிகள், ஏன் தாறுமாறான வாழ்க்கைகள் **நீதிமொழி 22:14-ல் பரஸ்திரீகளின் வாய் ஆழமான படுகுழி, கர்த்தருடைய கோபத்திற்கு ஏதுவானவன் அதிலே விழுவான்.** அதினால் தான் அநேகர் வேசித்தனத்தில் விழுந்து தங்கள் சரீரங்களை, தேவனுடைய ஆலயத்தை, மகிமையின் ஆலயத்தை விற்றுப்போடுகிறார்கள். இன்றைக்கு அவர்களுடைய இருதயம், உள்ளம், சரீரம் கள்வர் குகையாக மாறி ஜெபிக்க முடியாமல், துதிக்க முடியாமல், தேவனுடைய பிரசன்னத்தை அனுபவிக்க முடியாமல், தேவ சமூகத்திலிருந்து துரத்தப்பட்டு, ஆதாம் ஏவாளைப் போல் மகிமையை சாத்தானுக்கு விற்றுப் போட்டார்கள்.

சொல்லப்போனால் தேவன் மனிதர்களை விற்பதற்கு முன்னதாக ஜனங்கள் தங்களை சாத்தானுக்கு விற்றுப்போட்டார்கள், அடிமையானார்கள். இதனால்தான் உலகம் தேவகோபத்திற்கு உள்ளாகி





www.jesuslives.in

இருக்கிறது. கொடிய கொள்ளை நோய்களும், காட்டுத் தீக்களும், பூமி அதிர்ச்சிகளும் உண்டாயிருக்கிறது. இவ்வளவு நடந்தும், அடிவாங்கியும் யாரும் தங்களைத் தாழ்த்தி, தேவனை தேடுவதிலோ, பொல்லாத வழிகளை விடுவதிலோ ஆர்வம் இல்லை. அதினால் தேவன் துன்மார்க்கரின் கையிலும், கொள்ளைக்காரர்கள் கையிலும் அவர்களை விற்றுப்போட்டார். எங்கே உன் விஞ்ஞானம், எங்கே உன் அணுஆயுதம், எங்கே உன் படிப்பு மீண்டு வா பார்ப்போம். அவைகள் உன்னை தப்புவிக்குமா? பார்ப்போம் என்று காத்திருக்கிறார். இந்த நிலையில் யார் ஒருவர் தன்னைத்தாழ்த்தி தேவனைத்தேடி, அவர் இரக்கத்திற்காக கெஞ்சுகிறானோ அவன் மீட்கப்படுவான், திரும்ப நிலைநாட்டப்படுவான். இயேசு சொன்னார் மத்தேயு 13:44 முதல் 46-ல் அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது, அதை ஒரு மனுஷன் கண்டு மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான். ஒருவன் விலையுயர்ந்த முத்தைக் கண்டு போய் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று அதைக் கொள்ளுகிறான் என்றார். தனக்கு லாபமாய் இருந்த, தனக்கு வசதியாய், மேன்மையாய் இருந்த எல்லாவற்றையும், படிப்பு, அந்தஸ்து, வசதிவாய்ப்பு சொத்து, பதவி எல்லாவற்றையும் அப்போஸ்தலனாகிய பவுல் நஷ்டமென்று எண்ணி ஒப்பற்ற செல்வமாகிய பொக்கிஷத்தை, இயேசுவை, விலையேறப் பெற்றவரை பின்பற்றினான். தனக்கு லாபமாயிருந்த அனைத்தையும் நஷ்டமென்று எண்ணினான். தனக்கு உண்டான ஆஸ்தி, ஐசுவரியம் எல்லாவற்றையும் விற்று இயேசுவை அவன் வாங்கிக்கொண்டான், சம்பாதித்தான், பொக்கிஷத்தைப் பெற்றுக்கொண்டான் இதைத்தான் ஆண்டவராகிய இயேசு அந்த பணக்கார வாலிபனுக்கு சொன்னார், மாற்கு 10:21,22 லூக்கா 18:22,23-ல் உனக்கு உண்டான எல்லா மேன்மைகளையும், வசதிவாய்ப்புகளையும் விட்டுவிட்டு, இழந்து பின்னிட்டுப் பார்க்காமல், உனக்கு லாபமாயிருந்த அனைத்தையும் எனக்காக விட்டுவிடுவாயா? என்றார். அவனோ முக வாட்டத்தோடே திரும்பிப் போய்விட்டான். காரணம் அவனுக்கு அவ்வளவு ஆஸ்தி, சொத்துக்கள் இருந்தது. அவன் அதை விட முடியவில்லை. தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று பரலோகராஜ்யத்தை சுதந்தரிக்க முடியவில்லை. தன்னை இந்த மாயைக்கும், இம்மைக்கும் விற்றுப்போட்டான். இன்றைக்கு நாம் தேவனுடைய இரக்கத்தையும், அன்பையும் பெற்றது உண்மையானால் நம்மை விற்று, இழந்து தேவனுடைய இரத்தத்தினால் விலைகொடுத்து வாங்கப்பட்டு விடுவோம். இதை நிறைவேற்றச் செய்யத்தான் ஆண்டவராகிய இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்தார். நீங்கள் பணமுமின்றி விலையுமின்றி மீட்கப்படுவீர்கள் என்றார் ஏசாயா 55:1, 1 பேதுரு 1:18,19-ல் உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள் என்றார். இன்றைக்கு மனம் திரும்பி உங்களை தாழ்த்தினால் மீட்கப்படுவீர்கள். தேவனுடைய இரத்தத்தினால் விலைகொடுத்து வாங்கப்பெறுவீர்கள். பரலோகராஜ்யத்தின் பொக்கிஷங்களைப் பெற்றுக்கொள்வீர்கள். உங்கள் அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்படுவீர்கள். நீங்கள் இழந்து போன, நீங்கள் விற்றுப்போட்ட சகல ஆசீர்வாதங்களையும் தேவன் உங்களுக்கு திரும்பக்கொடுத்து, உன்னிலும் பலத்தவனுடைய கைகளுக்கு உங்களை மீட்டுக் காத்துக்கொள்வார், தப்புவிப்பார். அடுத்ததாக ஜனங்கள் எதை, யாரை விற்றார்கள்? என்பதைப் பார்ப்போம்

**யார் ஒருவர் தன்னைத்தாழ்த்தி தேவனைத்தேடி, அவர் இரக்கத்திற்காக கெஞ்சுகிறானோ அவன் மீட்கப்படுவான், திரும்ப நிலைநாட்டப்படுவான்.**




www.jesuslives.in

# இயேசுவை விற்ற யூதாஸ்

நான் அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள். மத்தேயு 26:15. யோசேப்பை அவன் சகோதரர்கள், அவனை இந்த இஸ்மவேலருக்கு விற்றுப்போடுவோம் வாருங்கள், நமது கை அவன்மேல் படாதிருப்பதாக என்று சொல்லி, அவர்கள் யோசேப்பை அந்தக் குழியிலிருந்து தூக்கியெடுத்து, அவனை இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். ஆதி 37:27,28. தேவன் ஜனங்களை விற்றுப் போட்டார் என்பதைப் பார்த்தோம். ஆனால் அவரால் உண்டாக்கப்பட்ட, சிருஷ்டிக்கப்பட்ட ஜனங்கள் அவரையே விற்று, தொலைத்து விட்டார்கள். சிலர் தங்க நகைகளை ஆசைப்பட்டு வாங்கி, வீட்டிலே அதை குறித்து பெருமையாய் பேசிக்கொள்வார்கள். ஆனால் திடீரென பணத்தேவை வந்து அல்லது எதிர்பாராத செலவுகள் வந்தால் கொண்டு போய் அடகுக்கடையில் அடகு வைத்து விடுவார்கள். சில காலம் வட்டி கட்டுவார்கள். அதன் பிறகு அதையும் விட்டு விடுவார்கள். பிறகு என்ன ஆகும்? அது ஏலம் போய் விற்கப்பட்டு விடும். அதை இழந்ததுதான் மிச்சம். இன்றைக்கு அதைப்போல் சிலர் விலையேறப்பெற்ற இயேசுவை ஏற்றுக் கொள்கிறார்கள், பின்பற்றுகிறார்கள். பிரச்சனை, சோதனை என்று வந்தால், உலகம், பணஆசை என்று வந்தால் இயேசுவை மறந்து வேலை வேலை என்று ஓடி பணம் பணம் என்று அலைந்து தங்கள் வீணானவைகளுக்காகத் தங்கள் மகிமையை மாற்றிக் கொள்ளுகிறார்கள். இப்படியாகத்தான் யூதாஸ் இருந்தான். உலகத்தின் பின்னால் ஓடின அவனை இயேசு தெரிந்து கொண்டு தம்மோடு இருக்கவும், பிசாசுகளை துரத்தவும், வியாதிகளை சுகமாக்கவும்,



தனக்குப்பின் அவருடைய ஊழியத்தை செய்யவும் ஏற்படுத்தினார். ஆனால் பணப்பிரியனாய் இருந்தான். அவன் கையில் இருந்த பணத்தை அடிக்கடி திருடிவிடுவான். அடிக்கடி ஆண்டவராகிய இயேசுவின் மேல் எரிச்சலடைந்து, முறுமுறுத்து குற்றம் கண்டுபிடிக்கிற ஆவியோடு அலைந்தான். முடிவு என்ன?, இயேசுவை பகைத்த யூதகுருக்களோடு சேர்ந்து கட்சிமாறி 30 வெள்ளிக்காசுக்கு ஆசைப்பட்டு வயல்களையும், திராட்சைத் தோட்டங்களையும், ஆடுமாடுகளையும் வாங்கி சுகபோகமாய் வாழலாம் என்று தன் மனச்சாட்சியை விற்றுப்போட்டான். பண ஆசைக்காக இயேசுவை காட்டிக்கொடுத்தான், விற்றுப்போட்டான். அவன் நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று. எவ்வளவோ கற்பனை பண்ணி உலகத்தில் ஐசுவரியவானாய் திகழலாம், முப்பது வெள்ளிக்காசு என்பது இன்றைக்கு 30 கோடிக்கு சமம். அதை வைத்து உலகத்தை அநுபவிக்கலாம் என்று நினைத்ததால் அவன் மனச்சாட்சியே அவனை வாதித்தது. தற்கொலை செய்யும்படி தூண்டிற்று. பரிசுத்தத்தை, கிருபையை, மகிமையை, வார்த்தையானவரை அவன் விற்றுப்போட்டான். உணவுக்காக, உடைக்காக, உலகத்தில் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக இயேசுவை விற்றுப்போட்டான். அதே போலத்தான் யாக்கோப்பின் பிள்ளைகள் பத்துபேர் யோசேப்பின் மேல் பொறாமை கொண்டு எங்கள் தகப்பன் எங்களை காட்டிலும் யோசேப்பை அதிகமாய் நேசிக்கிறார், அது மாத்திரமல்ல நாங்கள் செய்கிற சின்ன சின்ன தவறுகளைக் கூட தகப்பனிடத்தில் சொல்லி விடுகிறான். இவை எல்லாவற்றிற்கும் மேலாக சொப்பனங்கண்டு சூரியனும், சந்திரனும் தன்னை வணங்கும் என்றும், நாங்கள் அவனுக்கு அடிமைகள் என்று சொல்லுகிறானே இவனை ஒரு வழி பண்ணவேண்டும் என்று இயேசுவைப் போல் யோசேப்பையும் அவர்கள் இஸ்மவேலருக்கு இருபது வெள்ளிக்காசுக்கு விற்றார்கள். யோசேப்பு கைமாறி அடிக்கடி மாற்றப்பட்டு விற்கப்பட்டான். உண்மையில் அவர்கள் விற்றது யோசேப்பை அல்ல. அவன் தேவனுக்கு பயப்படுகிறவன் என்ற **தெய்வபயத்தை விற்றார்கள்.** போத்திபாரின் மனைவி தவறான உறவுக்கு அழைத்த போது **தேவனுக்கு விரோதமாக நான் பாவம் செய்வது எப்படி என்ற சுபாவத்தை விற்றார்கள்,**



சொல்லப்பட்டுள்ளது. மட்டுமல்ல நாம் அவரை அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருக்கிறோம் என்று ரோமர் 8:15-ல் சொல்லப்பட்டுள்ளது. நாம் அவருடைய பிள்ளைகள், அவருடைய பிள்ளைகளாய் வாழ இயேசு நமக்காக இரத்தம் சிந்தி நம்மை மீட்டு விலைகொடுத்து வாங்கியிருக்கிறார். மட்டுமல்ல அவருடைய பரிசுத்த ஆவியானவரை நமக்கு அனுப்பி, நிரப்பி அப்பா பிதாவே என்று உறவாடவும், அவரை கூப்பிடவும் அவருக்கு முதற்பேறானவர்களாக இருக்க வேண்டும் என்றும் நம்மை அழைத்திருக்கிறார். இதைத்தான் அவர் கெட்டகுமாரனுடைய உவமையில் சொல்லியிருக்கிறார். ஆனால் அந்த இளையமகனோ சொத்தை எல்லாம் எல்லாவற்றையும் செலவழித்து, பிள்ளை என்ற அதிகாரத்தை இழந்து, அப்பா பிதாவே என்று கூப்பிடுகிற உரிமையை இழந்து, நாடோடியாய் அலைந்து, தேவசமூகத்தை இழந்து தவித்தான். ஆனால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட தருணத்தை சரியாய் பயன்படுத்தி, புத்திதெளிந்து, தன் தகப்பனிடத்தில் திரும்பவும் வந்து, தன் பாவத்தை அறிக்கைச் செய்து, மீண்டும் மகனாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, தேவ பிரசன்னத்தோடு இணைக்கப்பட்டு, விற்றுப்போட்ட, இழந்துபோன அந்த உறவை திரும்ப ஏற்படுத்திக் கொண்டான். இன்றைக்கு இப்படிப்பட்ட சரி செய்தலைத்தான், மனம் திரும்புதலைத்தான் தேவன் விரும்புகிறார், எதிர்பார்க்கிறார். இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே இனியும் உங்களை பாவத்துக்கும், உலக மாயைக்கும் விற்றுப்போடாமல், நமக்குள் இருக்கும் இயேசுவை உலக இன்பத்திற்காக, பொல்லாப்பு செய்ய விற்றுப்போடாமல், அவரை பரிசுத்தம்பண்ணி, கனம்பண்ணி, விலையேறப் பெற்ற மகனாக, மகளாக வாழுவோம். இப்படிப்பட்ட வாழ்க்கைக்குத்தான், இந்த மேன்மையான வாழ்க்கைக்குத்தான் கர்த்தர் நம்மை அழைத்திருக்கிறார். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்களை சத்தியத்தை வாங்குகிறவர்களாக, விற்கிறவர்களாக அல்ல தேவவசனத்தைப் பெற்றுக் கொள்கிறவர்களாக மாற்றுவாராக. அவருக்கு மகிமையாக வாழ உங்களை விலையேறப் பெற்றவர்களாக மாற்றுவாராக!.

கர்த்தர் தன்னோடு இருந்தால் எந்த ஒரு தவறையும் செய்ய முடியாது என்ற தேவ பிரசன்னத்தைத் தான் விற்றார்கள். இன்றைக்கு பாவத்திற்காக, மாயைக்காக தேவன் கொடுத்த மகிமை, கிருபை, நேரம், வாழ்க்கை எல்லாம் விற்றுபோட்ட மனிதர்கள் இருக்கிறார்கள். 1 இராஜா 21:25-ல் தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்டபடியே, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய, தன்னை விற்றுப்போட்ட ஆகாப்பைப் போல ஒருவனுமில்லை என்று வேதம் சொல்லுகிறது. இன்றைக்கு பொல்லாப்பு செய்ய துணிகரமாய் தாங்கள் சுயநலத்திற்காக தங்களை விற்றுப்போடுகிற ஜனங்கள் பூமியில் பெருகிவிட்டார்கள். தேவகோபம் வராமல் என்ன வரும். அதனால்தான் தேசம் தண்டிக்கப்படுகிறது. அடுத்ததாக பாருங்கள் எபி 12:16 ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கை யாயிருங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. தன் மூத்த உரிமையை, சேஷ்டபுத்திரத்தை உணவுக்காக விற்றுப்போட்டான். பிற்பாடு அது தவறு என்று கண்ணீரோடு கதறியும் மனம் மாறுதலை காணாமல் போனான். தேவனுடைய இராஜ்யம் என்பது உணவும், உடையும் அல்ல, அது நீதி,பரிசுத்த ஆவியினால் உண்டாகும் மகிழ்ச்சி. நாம் இயேசுவுக்கு பிள்ளைகளாகும்படிக்கு, அவர் நாமத்தின் மேல் விசுவாசம் வைத்த அத்தனை பேர்களுக்கும் பிள்ளைகளாகும் அதிகாரத்தை, உரிமையை கொடுத்திருக்கிறார் யோவான் 1:12-ல் காடுத்திருக்கிறார்



www.jesuslives.in




# உங்களுக்கு ராஜ்யத்தை கொடுப்பேன்

சகோதரி. கலா வின்செண்ட்ராஜ்


ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!. நமக்கு ஒருவர் ஏதாவது கொடுப்பேன் என்று சொல்லிவிட்டாலே நமக்குப் பெரிய சந்தோஷம் வருகிறது. அது அப்படியே கிடைக்கும் போது பெரிய மகிழ்ச்சி. ஆனால் நமக்குக் கொடுப்பேன் என்று சொல்பவர் மனிதர் அல்ல, வானத்தையும், பூமியையும் உண்டாக்கின சர்வ வல்லவர் அவர் என்ன கொடுக்கிறார். லூக்கா 12:32-ல் பயப்படாதே! சிறுமந்தையே உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க பிதா பிரியமாயிருக்கிறார் என்று இயேசு சொல்கிறார். எனக்குப் பணம் வேண்டியதிருக்கிறது, சுகம் வேண்டியதிருக்கிறது, சமாதானம் வேண்டியதிருக்கிறது, பிள்ளைக்கு திருமணம் நடக்க வேண்டியதிருக்கிறது, திருமணம் நடந்தும் பல வருடங்கள் ஆகியும் குழந்தையில்லாமலிருக்கிறது, எனக்கு வரவேண்டிய நன்மைகள் தடைபட்டிருக்கிறது, சொத்து, நிலம், பணம் வராமல் இருக்கிறது, டிரான்ஸ்பர் வர வேண்டியதிருக்கிறது, தேவனுடைய ராஜ்யத்தை கொடுப்பேன் என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறாரே! அதனால் என்ன நன்மை என்று நினைக்காதீர்கள். **மத் 6:33, லூக் 21:31-லும் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளொல்லாம் உங்களுக்குக் கொடுக்கப்படும்** என்று ஆண்டவர் சொல்கிறார். தேவனுடைய ராஜ்யம் என்பது என்றால் என்ன? **ரோமர் 14:17-ல் தேவனுடைய ராஜ்யம் என்பது புசிப்பும், குடிப்பும் அல்ல, அது நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது** என்று பவுல் எழுதுகிறார். நாம் இந்த உலகத்தில் வாழ்ந்தாலும் நீதியுள்ளவர்களாய், சமாதானத்தால், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷத்தால் நிறைந்தவர்களாய் வாழவும், அதைத் தருகிற தேவனாகிய கர்த்தருடைய முகத்தை தேடுகிறவர்களாய் இருக்கவும், அதினிமித்தம் இவ்வுலக ஓட்டம் முடியும் போது அவர் நமக்கு நியமித்திருக்கிற பரம ராஜ்யத்திற்குப் போகவும் வேண்டும் என்று தான், அந்த ராஜ்யத்தை உனக்குக் கொடுப்பேன் என்கிறார்.



www.jesuslives.in

# இஸ்ரவேல் தேசத்தை உனக்குக் கொடுப்பேன்

பழைய ஏற்பாட்டின் நாட்களில் ஆபிரகாமை தேவன் அழைத்து ஆதி 12:7-ல் உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுப்பேன் என்றார். சந்தோஷமாய் தேவனைப் பின்பற்றி கல்தேயர் தேசத்திலிருந்து புறப்பட்டு கானானை நோக்கிப் பிரயாணப்பட்டான். நீ இந்த தேசத்தின் நீளம் அகலம் எவ்வளவோ, அம்மட்டும் நடந்து திரி, உனக்கு அதைத் தருவேன் என்றார். ஈசாக்கிடமும் ஆதி 26:3-ல் இந்த தேசத்திலே வாசம்பண்ணு, நான் உன்னோடே கூட இருந்து உன்னை ஆசீர்வதிப்பேன். நான் உனக்கும், உன் சந்ததிக்கும் இந்த தேசங்கள் யாவையும் தந்து உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவேன் என்றார். ஆதி 35:12-ல் யாக்கோபை பார்த்து நான் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும் கொடுத்த தேசத்தை உனக்குக் கொடுப்பேன், உனக்குப் பின் உன் சந்ததிக்கும் இந்த தேசத்தை கொடுப்பேன் என்றார்.ஆபிரகாமை அழைத்து கர்த்தரே புறப்படச் செய்து கானான் தேசத்தை கொடுத்தார்.



ஈசாக்கை இங்கேயே தங்கியிரு நான் உன்னை ஆசீர்வதித்து, இந்த தேசத்தை உனக்கும், உன் சந்ததிக்கும் தந்து, என் தாசன் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றுவேன் என்றார். ஆனால் யாக்கோபுக்கு அப்படியல்ல அவன் தன் தாயின் ஆலோசனையைக் கேட்டு குறுக்கு வழியில் ஈசாக்கை ஏமாற்றி மூத்தமகன் என்று சொல்லி ஆசீர்வாதம் பெற்றுச் சென்றான். இதினிமித்தம் வீட்டை விட்டு வெளியேறி, இருபது ஆண்டுகள் அடிமையாய் வாழ்ந்தான். திருமணத்தில் ஏமாற்றப்பட்டான், சம்பள பணத்தில் ஏமாற்றப்பட்டான், கடுமையாய் உழைத்தாலும் மனைவியின் சகோதரர்கள் எங்கள் தகப்பனுக்கு உண்டானதையெல்லாம் இவன் எடுத்துக் கொண்டான் என்றும், இவன் எங்கள் தகப்பனாலே இந்த செல்வத்தையெல்லாம் அடைந்தான் என்று குற்றச்சாட்டைப் பெற்றான். அதனால் அங்கிருந்து புறப்பட்டு, தகப்பனுடைய தேசத்துக்கு புறப்பட்டு வரும்போது ஏசா அழித்து விடுவானோ என்று பயந்து ஆண்டவரிடம் நெருங்கி நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போக விடமாட்டேன் என்று ஜெபிக்கிறான். அங்கே தேவன் அவனை சரிசெய்து, அவனை ஆசீர்வதித்து அவனை இஸ்ரவேலாய் மாற்றினார். அதன்பிறகு மகள் தீனாள் நிமித்தம் பல உபத்திரவங்களைச் சந்தித்து அந்த பட்டணத்திலிருந்து கானான் தேசத்திலுள்ள, தேவன் முன்பு தனக்குத் தரிசனமான இடத்தில் வந்து அவருக்குப் பலிபீடம் கட்டின போது தான், தேவன் அவனுக்கு மறுபடியும் தரிசனமாகி நான் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும் கொடுத்த தேசத்தை உனக்கு கொடுப்பேன், உனக்குப் பின் உன் சந்ததிக்கும் கொடுப்பேன் என்றார். சுலபமாக உடனடியாக அவனுக்கு இந்த ஆசீர்வாதம் உண்டாயிருக்கவில்லை. அவனறியாமல் சில தவறுகள், சில சிட்சைகள், பல போராட்டங்கள் இவைகளைக் கடந்து, கர்த்தரிடம் தன்னைத் தாழ்த்தி அர்ப்பணித்து, அவன் இந்த ராஜ்யத்தின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டான். அதே போலத்தான் இன்றைக்கு நம்முடைய வாழ்விலும் பல்வேறு தவறுகள், குறைபாடுகள், பலவித இன்னல்கள், சிட்சைகள் இவைகளையெல்லாம் கடந்து போகிறோம். யாக்கோபை போல பலவித பாதிப்புகளை சந்தித்த நம்மைப் பார்த்து ஆண்டவர் எசே 11:17-ல் நான் உங்களை ஜனங்களிடத்திலிருந்து சேர்த்து, நீங்கள் சிதறடிக்கப்பட்ட தேசங்களிலிருந்து உங்களைக் கூட்டிக் கொண்டு இஸ்ரவேல் தேசத்தை உங்களுக்குக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல்லு என்று ஆண்டவர் சொல்கிறார். யாக்கோபு தன் குமாரன் யோசேப்பை பார்த்து ஆதி 48:4-ல் நான் உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணி, உன்னைப் பல ஜனக்கூட்டமாக்கி உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கு இந்த தேசத்தை நித்திய சுதந்திரமாகக் கொடுப்பேன் என்று என்னோடே சொன்னார் என்பதைச் சொல்லி யோசேப்பின் குமாரரை ஆசீர்வதித்தான் என்று வாசிக்கிறோம். மோசேயிடம் கர்த்தர் பேசின போது நானூற்று முப்பது வருஷம் எகிப்திலே யாக்கோபின் சந்ததி அடிமைத்தனத்தில் கொடுமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் நான்



www.jesuslives.in

உன்னை அனுப்பி பார்வோனின் கையிலிருந்து விடுவித்து கொண்டு வருவேன் வா என்று அழைத்து, நான் யெகோவா, சர்வ வல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை. அவர்கள் பரதேசிகளாய் தங்கின தேசமாகிய கானான் தேசத்தை அவர்களுக்குக் கொடுப்பேன் என்று நான் அவர்களோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறேன் என்றார். யாத் 6:2-8 வரை வாசித்தால் நான் ஆணையிட்ட தேசத்தில் உங்களைக் கொண்டு போய், அதை உங்களுக்கு சுதந்திரமாகக் கொடுப்பேன் நான் கர்த்தர் என்று அவர்களுக்குச் சொல் என்றார். வேதத்தில் அநேக முற்பிதாக்களை இந்த ராஜ்யத்திற்காகவே வேறு பிரித்து அதற்காகவே அவர்களோடு இருந்து நடத்தினதை நாம் பார்க்கிறோம். அநேக ராஜாக்கள் சரியாய், பிரியமாய் தேவனுக்குள் வாழ்ந்தார்கள். பலர் செம்மையானதை செய்யவில்லை. நாம் அப்படி செம்மையானதைச் செய்யாதவர்களாய் இராதபடி, அந்த ராஜ்யத்தை இழந்து விடாதபடி மிகுந்த கவனமாயிருப்போம்.

## இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்கு திரும்ப கொடுப்பீர்

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு நாற்பது நாளளவும் தம்முடைய சீஷர்களோடு பேசி தாம் உயிரோடு இருப்பவராக நிரூபித்தார். அப்பொழுது கூடி வந்தவர்கள் ஆண்டவரே! இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலருக்கு திரும்ப கொடுப்பீர் என்று கேட்டார்கள். அப் 1:6-ல் அதற்கு இயேசு பிதாவுடைய காலங்களையும், வேளைகளையும் அறிவது நமக்கு உரியதல்ல என்று சொன்னார். சீஷர்கள், மக்கள் இந்த ராஜ்யம் தங்களுக்கு வேண்டும் என்று ஏங்கினார்கள். அதற்குப் பரிசுத்த ஆவியானவரைப் பெற எருசலேமில் காத்திருந்தார்கள். ஆனால் சாலமோன் மகன் ரெகொபெயாம் காலத்தில் இராஜ்யம் இரண்டாய் பிரிந்தபோது யெரொபெயாம் 1 இராஜா 11:38-ல்



நான் உனக்கு கட்டளையிட்டதையெல்லாம் நீ கேட்டுக் கைக்கொண்டு, நீ என் வழிகளில் நடந்து என் தாசனாகிய தாவீது செய்தது போல என் கட்டளைகளையும், என் கற்பனைகளையும் கைக்கொள்ளும்படிக்கு என் பார்வைக்கு செம்மையானதைச் செய்கிறதுண்டானால், நான் உன்னோடிருந்து நான் தாவீதுக்கு கட்டினது போல உனக்கும் நிலையான வீட்டைக் கட்டி இஸ்ரவேலை உனக்குத் தருவேன் என்றார். அவனோ கர்த்தரின் காரியத்தில் கவனம் செலுத்தவில்லை. கன்றுகுட்டிகளை செய்து, பண்டிகைகளைக் கொண்டாடி பலிபீடத்தின் மேல் பலியிட்டான். அதைப் போலத்தான் எகிப்திலே இருந்து அழைத்து வரப்பட்ட ஜனங்கள் கன்றுக்குட்டி ஒன்றை பொன்னாபரணங்களால் செய்து எங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த தெய்வங்கள் இவைகளே என்றார்கள். தேவ கோபம் இறங்கியது. தேவன் இந்த ஜனத்தை அழித்து விடுவேன் என்றார். அப்பொழுது மோசே ஆண்டவருக்கு முன்பாக நின்று ஆண்டவரே இந்த ஜனத்தின் மீது பரிதாபம் கொள்ளும் என்று சொல்லி விட்டு யாத் 32:13-ல் உமது தாசராகிய ஆபிரகாமையும், ஈசாக்கையும், இஸ்ரவேலையும் நினைத்தருளும். உங்கள் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போல பெருகப்பண்ணி, நான் சொன்ன இந்த தேசம் முழுவதையும் உங்கள் சந்ததியார் என்றென்றைக்கும் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு அவர்களுக்குக் கொடுப்பேன் என்று உம்மைக் கொண்டு அவர்களுக்கு ஆணையிட்டு சொன்னீரே என்று கெஞ்சி பிராதித்தான். இன்றைக்கு நாமும் கூட ராஜ்யத்தை உனக்குத் தருவேன் என்று ஆண்டவர் சொல்லும் போது ஆண்டவரே! நீர் ராஜ்யத்தைத் தருவது இந்த காலமா? என்று ஏக்கத்தோடு கேட்கிறோமா? இல்லாவிட்டால் வழி விலகி வீணான காரியங்களில், வீணான நம்பிக்கைகளில் சிக்கி தேவ கோபத்திற்கு ஆளாக இருக்கிறோமா! ஆராய்ந்து பாருங்கள் ஏக்கத்தோடு கேட்டவர்கள் மேல்வீட்டறையில் ஏறி பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இராஜ்யத்தை சுதந்தரிக்கிறவர்களாய் இருந்தார்கள். ஆனால் தேவ


www.jesuslives.in

கோபத்திற்கு ஆளானவர்கள் மோசேயின் ஜெபத்தினால் தான் பாதுகாக்கப்பட்டார்கள். ஒருவேளை நான் வழிதவறி தேவனை ஏதோ ஒரு காரியத்தில் துக்கப்படுத்தி விட்டேன் அல்லது எங்கள் வீட்டில் உள்ளவர்கள் மேல் தேவகோபம் வருகிறதாய் இருக்கிறது, அவர்கள் அப்படி நடக்கிறார்கள் என்று உணர்வீர்களானால் மோசேயைப் போல ஆண்டவரே! உமது ராஜ்யத்தை எங்களுக்கும், எங்கள் சந்ததிக்கும் கொடுப்பேன் என்று ஆணையிட்டு இருக்கிறீரே! எங்கள்மேல் பரிதாபம் கொண்டு எங்களுக்கு இரங்கும் என்று கெஞ்சுங்கள். எங்களுக்கும், எங்கள் சந்ததிக்கும் உமது ராஜ்யம் வேண்டும் என்று கேளுங்கள். உமது ராஜ்யம் வருவதாக! என்று ஜெபிக்க கற்றுக் கொடுத்தீரே! எங்கள் வீட்டில் உம்முடைய ராஜ்யம் வர வேணுமே! ஒவ்வொருவரும் அந்த ராஜ்யத்திற்கு உகந்தவர்களாய் மாற வேண்டும் என்று ஜெபியுங்கள். எசே 16:2-14 வரை எவ்வளவு பரிதாப நிலையில் இருந்த நம்மை தேவன் அருகில் வந்து சந்திக்கிறார். எப்படி நம்மை அலங்கரிக்கிறார். எப்படி போஷிக்கிறார், அவரது அன்பு எவ்வளவு பெரியது என்று நம்மால் அறிய முடியும். அதில் 13-ஆம் வசனத்தை வாசித்தால் இவ்விதமாய் பொன்னினாலும், வெள்ளியினாலும் நீ அலங்கரிக்கப்பட்டாய், உன் உடுப்பு மெல்லிய புடவையும், பட்டும், சித்திரதையலாடையுமாயிருந்தது. மெல்லிய மாவையும், தேனையும், நெய்யையும், நீ சாப்பிட்டாய், நீ மிகவும் அழகுள்ளவளாகி ராஜ்யத்தை சுதந்தரிக்கும் சிலாக்கியத்தையும் பெற்றாய் என்று சொல்கிறார். அவர் நம்மேல் வைத்த அவருடைய மகிமையில் நாம் குறைவற்றவர்களாய், அவருடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றோம், எத்தனை மேன்மை!.

> **இயேசுவை விசுவாசித்து என் நிலைமை இப்பொழுது எப்படி இருந்தாலும் இதை ஆசீர்வாதமாய் மாற்ற உம்மாலே கூடும் என்று விசுவாசியுங்கள். நீங்கள் ராஜ்யத்தை சுதந்தரிப்பீர்கள்.**

## யார் இந்த ராஜ்யத்தை சுதந்தரிப்பார்

ஆபிரகாமுக்கு ஒரு பிள்ளைகூட இல்லாதிருக்கும் போது பூமி முழுவதையும், உலகத்தையும் சுதந்தரிப்பான் என்ற வாக்குத்தத்தைப் பெற்றான். ஆபிரகாம் அதை விசுவாசத்தினாலே பெற்றுக் கொண்டான். ரோமர் 4:13-ல் வாசிக்கிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் இதை நாம் சுதந்தரிப்போம். இப்பொழுது நம் நிலை ஒன்றுமில்லாத போல இருக்கலாம். ஒரு பிள்ளைகூட இல்லையே எப்படி பூமி முழுவதும், சந்ததி வரும் என்ற எண்ணம் எழலாம், ஆனால் நாம் இயேசுவை விசுவாசித்து என் நிலைமை இப்பொழுது எப்படி இருந்தாலும் இதை ஆசீர்வாதமாய் மாற்ற உம்மாலே கூடும் என்று விசுவாசியுங்கள். நீங்கள் ராஜ்யத்தை சுதந்தரிப்பீர்கள். ஆண்டவர் சில வழிகளை நமக்குச் சொல்லியிருக்கிறார். அவரை விசுவாசித்து ஏற்றுக் கொள்வது மட்டுமல்ல, அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தால் நம்மை, நம் கடந்த கால பாவத்தை கழுவ வேண்டும். எசே 16:9-ல் நான் உன்னை ஜலத்தினால் முழுக்காட்டி, உன்னை இரத்தமற ஸ்நானம்பண்ணுவித்து உன பாதரட்சையை தரித்து என்கிறார் பாருங்கள். யோவான் 3:5-ல் இயேசு பிரதியுத்திரமாக ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன் என்றார். இது ஒரு சபைக்கு சொந்தமான உபதேசம் அல்ல. இயேசு நிக்கோதேமு என்ற இஸ்ரவேலில் போதகனாயிருந்தவரிடம் சொல்லுகிறார். வசனம் 3-ல் ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே சொல்லுகிறேன் என்றார். இந்த தேவனுடைய வார்த்தைக்கு நாம் கீழ்படிந்து வாழும் போது ஆசீர்வதிக்கப்படுவோம். நமக்கு அவர் எண்ணெய் பூசி, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தால் நிரப்பி, சித்திரம் தீர்த்த பாதரட்சைகளை நமக்குப் போடுகிறார். வேதத்தின் ரகசியங்களை அறியச் செய்து நம்மை அலங்கரிக்கிறார். மெல்லிய மாவு, எண்ணெய், திராட்சைரசம், நெய் எவ்வளவு விதமான உணவுகள். வேதத்தை அனுதினமும் வாசித்து, தியானித்து அவர் முகத்தை தேடி அவரைத் துதித்து, புகழ்ந்து வாழும் போது அவரது ராஜ்யத்தை நோக்கி முன்னேறிப் போய் கொண்டிருப்போம், சுதந்தரிப்போம். அதுமட்டுமல்ல அவரது சித்தம் என்ன என்று நாம் அறியணும். மத்7:21-ல் பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தை செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பான்



www.jesuslives.in

என்று இயேசு சொன்னார். மத் 21:28-31 வரை வாசிக்கும் போது ஒரு தகப்பனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். மூத்தவனிடத்தில் வந்து நீ போய் இன்றைக்கு திராட்சை தோட்டத்தில் வேலை செய் என்றார். அவன் மாட்டேன் அதில் எனக்கு விருப்பமில்லை என்று சொல்லிவிட்டு பின்பு மனஸ்தாபப்பட்டு போய் செய்தான். இளையவனிடம் சொன்ன போது போகிறேன் என்று சொல்லி விட்டுபோகவில்லை. இவ்விருவரில் எவன் தகப்பனின் சித்தத்தைச் செய்தவன் என்று கேட்டார் மூத்தவன் என்றார்கள். ஆண்டவருக்காக, நமக்கு இத்தனை நன்மைகள் செய்தவருக்காக வேலை செய்ய வேண்டும், முழுநேரமாகத் தான் வர வேண்டும் என்று அல்ல. பக்கத்து வீட்டில் பேசும் போது, உறவுகள், நண்பர்களிடம் பேசும் போது இயேசுவை சொல்லலாம். உங்கள் தாலந்துகளை இயேசுவுக்காக பயன்படுத்தலாம். தேசங்களில் வேலை இழப்புகள் வரும் போது இயேசுவின் திராட்சை தோட்டத்தில் மட்டும் எல்லாருக்கும் வேலை இருக்கிறது. அவர் ஒருவரையும் சும்மா விடமாட்டார். அவர்கள் வேலையை கவனித்துக் கொண்டே இருப்பார். அதற்கேற்ற கூலி, ஆசீர்வாதத்தைத் தருவார். எங்கள் ஊழியத்தில் சோஸியல் மீடியாவில் சின்ன உதவி கனடாவில் இருந்து ஒரு தங்கை செய்து கொண்டிருந்தாள், தானாக முன்வந்து இதை நான் செய்கிறேன் என்று செய்து கொண்டிருந்தாள் வெகு விரைவில் அந்த தேசத்தில் அரசாங்க வேலை கிடைத்தது. அதையும் செய்து கொண்டே உறுதுணையாக இருக்கிறாள். உங்கள் வீட்டிலும் படித்த வாலிப பிள்ளைகள் மதுரையிலோ, திண்டுக்கல்லிலோ அருகாமையில் இருக்கிற பிள்ளைகள், இயன்ற பெரியவர்கள் எங்களோடு இணைந்து உங்கள் தாலந்துகளைப் பயன்படுத்தி ஊழியம் செய்யலாம். எங்களோடு தொலைபேசியிலோ, கடிதத்திலோ தொடர்பு கொள்ளுங்கள். ஆண்டவருக்குப் பயப்படுகிற பயம் இருந்தால் என்ன ஊழியம் செய்ய முடியுமோ செய்ய முன்வரலாம். மத் 5:20-ல் பரிசேயர், சதுசேயரை விட நம்முடைய நீதி சிறந்திருக்க வேண்டும். மத் 18:3-ல் மனந்திரும்பி பிள்ளைகளைப் போல மாற வேண்டும். மாற்கு 10:24-ன் பின்பகுதியில் பிள்ளைகளே ஐஸ்வரியத்தில் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறது அரிதாயிருக்கிறது என்றில்லாமல், அதை நமக்குத் தந்த தேவன் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும். அநேக உபத்திரவங்கள் வழியாகத்தான் தேவனுடைய ராஜ்யத்திற்குள் நாம் பிரவேசிக்க முடியும் என்பதை அறிந்து பாடுகளைக் கண்டு மனம் மடிந்து விடாமல் இந்த உபத்திரவம் தான் அந்த ராஜ்யத்திற்குள் என்னைக் கொண்டு போகிறது என்று உற்சாகமாய் முன்னேறுங்கள். தானியேல் 7 ஆம் அதிகாரத்தில் ஒரு கொம்பு பரிசுத்தவான்களோடு யுத்தம் செய்து மேற்கொண்டது. தானி 7:18,27 வசனங்களில் ஆனாலும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் ராஜ்யத்தைப் பெற்று என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள். வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும், ஆளுகையும், மகத்துவமும், உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்கு கொடுக்கப்படும். அந்த ராஜ்யமே நித்திய ராஜ்யம். இந்த ராஜ்யத்தை தேவன் நமக்கு கொடுக்கிறார். அதை அவர் நமக்கு கொடுக்கப் பிரியமாயிருக்கிறார். எவ்வளவு போராட்டம், சத்துரு போராடி மேற்கொண்டு விட்டேன் என்று எண்ணினாலும், நீங்கள் கூட அவ்வளவு தான் இனி நான் எழும்ப முடியாது என்று நினைத்து விட்டாலும் திரும்ப எழும்புங்கள், சத்துருவை முறியடிக்க தேவன் உங்களோடு இருக்கிறார். நீங்கள் ராஜ்யத்தை சுதந்தரிப்பீர்கள். ஆண்டவர் இயேசு தாமே துணை செய்து தமது ராஜ்யத்தை நமக்கு கொடுப்பாராக!.


www.jesuslives.in



அன்றன்றுள்ள அப்பம்
69TH
திருப்பத்தூர்
பரிசுத்த உபவாச முகாம்
சகோ. மோகன் C. லாசரஸ், சகோ. G. P. S ராபின்சன்,
சகோ. C. எபிநேசர் பால், சகோ. L.வின்சென்ட்ராஜ், பாஸ்டர் ஆஸ்பார்ன் ஜெபத்துரை
FEBRUARY
2,3,4
2023
வியாழன்,வெள்ளி 5Am - 9Pm
சனி 5Am - 1Pm
இடம் : அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்,
கிறிஸ்துகுல ஆசிரமம்,
திருப்பத்தூர் மாவட்டம்
தொடர்புக்கு +91-9962602777, 992648777




காங்கேயத்தில்
லெந்து கால
சுவிசேஷ கூட்டம்
Evg. L. Vincentraj
Evg. Kala Vincentraj
பிப்ரவரி
24, 25, 26
வெள்ளி சனி ஞாயிறு
தினமும் மாலை 6 மணிக்கு
இடம்
C.S.I இயேசு இரட்சகர் ஆலயம்
தாராபுரம் ரோடு, காங்கேயம்,
திருப்பூர் மாவட்டம்
தொடர்புக்கு 94980 00449
94428 00449

# என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை

சகோதரி.பிரேமா டேவிட்



நான் இஸ்ரவேலின் நடுவில் இருக்கிறவரென்றும், நானே உங்கள் தேவனாகிய கர்த்தர் வேறொருவர் இல்லையென்றும் அறிந்து கொள்வீர்கள். என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை.
யோவேல் 2:27.

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே நம் வெட்கங்களையும், வேதனைகளையும் சிலுவையில் சுமந்து தீர்த்தவராகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த மாதத்தில் என் ஜனமாகிய நீங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை, அவருடைய ஜனமாயிருக்க நாம் கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்க வேண்டும், அவருடைய கற்பனைகளை கண்ணோக்கவும், கைக்கொள்ளவும் வேண்டும் என்றும் பார்த்தோம். இந்த மாதத்திலும் அவருடைய ஜனமாகிய நாம் என்ன செய்தால் வெட்கப்படமாட்டோம் அல்லது யார் வெட்கப்படுவதில்லை என்று பார்ப்போம்?.



www.jesuslives.in

# இயேசுவை நோக்கிப் பாருங்கள் நீங்கள் வெட்கப்படுவதில்லை

**அவர்கள் அவரை நோக்கிப் பார்த்து பிரகாசமடைந்தார்கள், அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை. சங் 34:5** இராணுவத்தில் வேலை பார்த்த ஒரு சகோதரன் இயேசுவை ஏற்றுக்கொண்டார். முரடான அவர் வாழ்க்கை மாறியது. பேச்சு, நடை, பார்வை பழக்கவழக்கங்கள் மாறியது. அவர் பெயரையும் கூட மாற்றிக் கொண்டார். அவர் கூட வேலை செய்கிறவர்களுக்கு இது பிடிக்க வில்லை. ஏனென்றால் தான் மாறினது மட்டுமல்லாமல், தங்களிடமும் இயேசுவைப் பற்றி, ஒழுக்கத்தைப் பற்றி கூறுகிறானே என்று இவனை எப்படியாவது அதிகாரியிடம் மாட்டிவிட வேண்டும் என்றும், ஜெஜட்டில் பெயர் மாற்றாமல் தன் பெயரை மாற்றிக் கொண்டான். இவனுக்கு வரும் கடிதங்கள் கிறிஸ்தவ பெயரில் வருகிறது. இவன் மூலம் இராணுவ ரகசியம் வெளியே செல்கிறது என்று புகார் அளித்து, இவனுக்கு நல்ல தண்டனை கிடைக்க வேண்டும் இல்லையென்றால் வேலையிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று காத்துக் கொண்டிருந்தார்கள். அதிகாரிகள் இவரை அழைத்து விசாரிக்கிறதற்கான நாளுக்கு முந்தினநாள் உபவாசத்தோடு ஆண்டவரை நோக்கிப் பார்த்து ஜெபம் பண்ணினார். தன் இருதய-த்திலிருந்து உண்மையாய் இயேசுவே நீர் எனக்கு உதவி செய்யும் என்று விண்ணப்பம் செய்தார். மறுநாள் அதிகாரிகளுக்கு முன் நின்றார். ஒரு சீக்கிய அதிகாரி அவரிடம் ஏன் பெயரை மாற்றினாய்? என்று கேட்டபொழுது தன் வாழ்க்கையை மாற்றிய இயேசுவைப் பற்றியும், தான் ராணுவத்திற்கு எதிரான ஒரு செயலையும் செய்யவில்லை என்றும் சொன்னார். படிப்பு அதிகம் இல்லாத அவர், கொஞ்சம், கொஞ்சம் ஹிந்தி பழகியிருந்த அவர், அந்த அதிகாரி புரிந்து கொள்ளும் விதத்தில் பேசியது ஆச்சரியமே. அவரை விசாரித்த அதிகாரி சொன்னார் உன்னால் எந்த ராணுவ ரகசியமும் வெளியே போகவில்லை, இயேசு உன் வாழ்க்கையை மாற்றியிருக்கிறாரே. இவ்வளவு உண்மையான உனக்கு உயர்வு கொடுத்தால் நல்லாயிருக்குமே என்று அவருக்கு பிரமோஷன் கொடுத்தார்களாம் வெளியே காத்துக் கொண்டிருந்தவர்களுக்கு .... ஒரே வெட்கம், ஆனால் இயேசுவை நோக்கிப் பார்த்தவருடைய முகம் வெட்கமடையவில்லை, அவருடைய வாழ்க்கை, முகம் பிரகாசமாயிற்று **எங்கள் முன்னோர்கள் உம்மை நோக்கிக் கூப்பிட்டு தப்பினார்கள். உம்மை நம்பி வெட்கப்பட்டுப் போகாதிருந்தார்கள். சங் 22:4,5** இந்த வசனம் அப்படியே அவர் வாழ்வில் நிறைவேறிற்று. வேதத்தில் யாக்கோபு தன் தகப்பனை, சகோதரனை ஏமாற்றி ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டவனாய்,





www.jesuslives.in

தன் தாய் தகப்பனால் உயிரைக் காத்துக் கொள்ள மாமா வீட்டிற்கு அனுப்பப்பட்டான். அங்கே தன் சாதுரியத்தினால் மாமாவையும் ஏமாற்றி ஆசீர்வாதமாய் வாழ, உயர்வடைய முயற்சி செய்தான். ஏமாற்றுபவன் என்ற அர்த்தமுடைய பெயரைக் கொண்ட யாக்கோபு மற்றவர்களை ஏமாற்றின, தவறுதலான, பாவமான வாழ்க்கை வாழ்ந்த யாக்கோபு, இப்பொழுது தன் மாமாவால் ஏமாற்றப்படுகிறான். கஷ்டங்களை, வெட்கத்தை, வேதனைகளை சந்திக்கிறான். இந்த சூழ்நிலையில் ஏமாற்றின அண்ணனைச் சந்திக்க வேண்டிய ஒரு கட்டம் வந்த போது தான், அவன் தன் தேவனை நோக்கிப் பார்க்கிறான். இதுவரை என்னுடைய ஞானம், பெலன், திறமை, சாதுரியம் என இருந்தேன், பழைய பாவங்களோடு, கெட்ட குணம், பழக்கவழக்கத்தோடு இனி நான் வாழ முடியாது. உம் பிள்ளை, உம் ஜனம் என இனியும் நடக்க முடியாது. நீரே என் தேவன், என்னைத் தாழ்த்தி உம் கையில் கொடுக்கிறேன் என்றார். உம்முடைய ஆசீர்வாதம் தான் எனக்கு வேண்டும். அதுதான் வேதனை இல்லாதது. (நீதி 10:22) எனவே நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய நான் உம்மைப் போகவிடேன்.
(ஆதி 32:26) பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். (காப்பாற்றப்படுவீர்கள்). நானே தேவன் வேறொருவரும் இல்லை (ஏசாயா 45:22) என்று சொன்ன ஆண்டவரை நோக்கிப் பார்த்து கூப்பிட்ட போது, அவர் ஏமாற்றுகிற குணமுடைய அவன் பேரை, வாழ்க்கையை மாற்றினார். இனி உன் பேர் யாக்கோபு எனப்படாமல் இஸ்ரவேல் (தேவபிரபு, எல்லாவற்றிலும் வெற்றி பெறுபவர்) என்னப்படும். இனி யாக்கோபு வெட்கப்படுவதில்லை, இனி அவன் முகம் செத்துப் போவதில்லை ஏசாயா 29:22-ல் யாக்கோபை மட்டுமல்ல யாக்கோபின் தேவனை நோக்கிப் பார்க்கிற உங்கள் ஒவ்வொருவரின் முகமும் தொய்ந்து போவதில்லை. Nose cut அடைவதில்லை, Insult பண்ணப் படுவதில்லை, உங்கள் முகம், வாழ்க்கை பிரகாசமடையும், பழைய குணம், பழக்க வழக்கங்களை விலக்கி உங்களைத் தாழ்த்தி அவரை நோக்கிப் பாருங்கள் புதியவைகள் தோன்றச் செய்வார். இனி நீங்கள் வெட்கப்படுவதில்லை.

## கர்த்தருக்கு காத்திருங்கள் நீங்கள் வெட்கப்படுவதில்லை

நம்முடைய ஆண்டவர் இயேசு ஒருவரே தெய்வம். அவரே நம் பாவங்களுக்காக மரித்து, சாத்தானை வென்று உயிர்த்தெழுந்த தெய்வம். உங்கள் பாவமான சிந்தனைகள், செயல்களிலிருந்து விடுதலை தந்து நீங்கள் பரிசுத்தமாக, ஒழுக்கமாக வாழ உதவி செய்கிறவர். அவரை உங்கள் சொந்த தெய்வமாக ஏற்றுக்கொண்டு, அவரையே நம்பி எதிர்காலத்திற்காகவும், எந்த நன்மைக்காகவும், உயர்வுக்காகவும், நீதி நியாயத்திற்காகவும் காத்திருக்கிற நீங்கள் வெட்கப்படுவதில்லை. எப்பொழுது என் வாழ்வு விடியும் (சங் 30:6) என்று நீங்கள் நீண்ட காலமாய் காத்திருந்து இளைத்துப் போனீர்கள் கவலைப்படாதிருங்கள் உங்கள் காத்திருப்புக்குப் பதில் வருகிறது. இதுவரை நீங்கள் கேட்டிராத, கண்டிராத, நீங்கள் நினைத்தே பார்க்காத வகையில் பெரிய நன்மையை ஆண்டவர் உங்களுக்கு செய்து உங்களை வெட்கத்திலிருந்து தூக்கியெடுப்பார். ஏசாயா 64:4. ஆபிரகாம் பொறுமையாய் காத்திருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகனை, தேசத்தைப் பெற்றான்.
எபி 6:15. சங் 40:1-ல் கர்த்தருக்காய் பொறுமையாய் காத்திருந்தார். வெட்கப்பட்ட தகப்பன், சகோதரர் நடுவில் சவுல் ராஜா, ராணுவ வீரர்கள், கோலியாத், எதிரிகள் முன் புகழ்ச்சியும், கீர்த்தியுமாக தாவீது உயர்த்தப்பட்டார். சங் 3:3, செப் 3:19 ஆண்டவர் இயேசு தாமே அவரையே நம்பி காத்திருக்கிற, அவரை நோக்கிப் பார்க்கிற உங்களை தலையை நிமிரச் செய்து முகங்களை, வாழ்க்கையை பிரகாசமடையச் செய்வாராக!.


www.jesuslives.in



# செய்ய வேண்டியதை செய்ய வேண்டிய நேரத்தில் செய்

ரம்பா நன்றாக படிக்கக் கூடியவர் தான். ஆனால் இப்பொழுதெல்லாம் கவனமாய் படிப்பதுமில்லை, அம்மா சொல்லும் கேட்பதுமில்லை. படிக்க வேண்டிய நேரத்தில் ஒரே விளையாட்டு. வீட்டிற்கு வந்தா TV. மாதப்பரீட்சை நாளைக்கு துவங்குகிறது. மணி (நேரம்) ஆகியும் இன்னும் விளையாடிக் கொண்டேயிருந்தாள். அம்மா சத்தம் போட்டு படிக்கச் சொன்னார்கள். சிறிது நேரத்திலே குடும்ப ஜெபம், பின்பு சாப்பாடு எல்லாம் முடித்து, சீக்கிரமாக தூங்கச் சென்று விட்டாள். காலையிலே 7 மணி ஆகியும் ரம்பா எழுந்திரிக்கவில்லை. ரம்பா.... என்று அம்மா சத்தம் கேட்டுப் பயந்து எழுந்தாள் ரம்பா. சாயங்காலமும் சரியா படிக்கவில்லை, காலையிலாவது சீக்கிரம் எழுந்திரிச்சு படிக்காமல் இன்னும் தூக்கமா? என்று அம்மா அதட்டினாங்க இன்னைக்கு சாயங்காலம் நீ விளையாடப் போகக் கூடாது, TV போடக்கூடாது உங்க டீச்சரை நான் வந்து பார்க்கிறேன் என்று அப்பாவும் எச்சரித்தவுடன் தான் கொஞ்சம் பயம் வந்தது. அம்மா சாரிம்மா, அப்பா சாரிப்பா இனி மேல் நான் நேரத்தை வீணாக்காமல், அந்தந்த நேரத்தில் செய்ய வேண்டியதை செஞ்சிறேன் என்றாள் ரம்பா. ஆமா.... படிக்க வேண்டிய நேரத்தில படி, விளையாட வேண்டிய நேரத்தில விளையாடு அப்பத்தான் இயேசப்பா ஞானம், பெலன் தருவாங்க என்ன சரியா? என்றார் அப்பா.

மழைக்காலத்தில வெளியே போக முடியாது என்பதால எறும்புகூட, கோடை காலத்திலேயே உணவை சேர்த்து வைக்குதுன்னு நீதி 6:6-11, நீதி 30:25 பைபிள் சொல்லுது. நீ தினமும் விளையாடிட்டு, பரீட்சை நேரத்திலும் தூங்கிட்டு நேரத்தை வேஸ்ட் பண்றியே, எப்படி பரிட்சையில் மார்க் வாங்குவாய் என்று அம்மா கேட்டார்கள். சரிம்மா, சரிம்மா நான் இனிமே படிக்க வேண்டிய நேரத்தில படிக்கிறேன்மா என்றதும் **VERY GOOD** ஸ்கூலுக்கு சீக்கிரம் கிளம்பு என்றார்கள் அம்மா. இப்பவெல்லாம் அம்மா கூப்பிடாமலே ரம்பா செய்ய வேண்டிய வேலையை செய்ய வேண்டிய நேரத்தில செய்கிறாள். நீங்க எப்படி? ரம்பா மாதிரி உங்களையும் மாத்திக்குவீங்களா? இயேச-ப்பாவுக்கு அதுதான் பிடிக்கும் **ok** வா!!

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா டிவி, விளையாட்டுன்னு நாங்க **Careless** இருக்கக்கூடாது. எறும்பைப் போல சுறுசுறுப்பாய் நேரத்தை சரியாய் பயன்படுத்த, அம்மா, அப்பாவுக்குக் கீழ்படிந்து நடக்க உதவி செய்யுங்க. இயேசுவின் நாமத்தில் ஆமென்.

## மனப்பாட வசனம்



சோம்பற்கையால் வேலை செய்கிறவன் ஏழையாவான். சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும். கோடை காலத்தில் சேர்க்கிறவன் புத்தியுள்ள மகன். அறுப்புக் காலத்தில் தூங்குகிறவனோ இலச்சையை உண்டாக்குகிற மகன்.
நீதி 10:4,5.





www.jesuslives.in

# தடைகளை உடைக்கும் சர்வ வல்லமையுள்ள தேவன்



**சகோதரி. ஜாக்குலின் ரவி – நீலகிரி**

என் மகள் எஸ்தர் ஐஸ்வரியாவின் திருமணம் விரைவில் நடைபெறவும், தேவ சித்தமுள்ள ஏற்ற துணையை தேவன் தரவும், தேவைகள் சந்திக்கப்படவும் வேண்டும் என்றும், இயேசுவை தினம் பார்க்கிறேன் பத்திரிக்கையில் சாட்சி எழுதுவேன் என்று சொல்லி பொருத்தனை பண்ணி ஜெபித்தோம். தேவன் ஜெபத்திற்குப் பதில் தந்து கடந்த நாட்களில் என் மகளுக்கு தேவ சித்தமுள்ள ஏற்ற துணையை தேவன் தந்தார். திருமணத் தேவைகளை சந்தித்து, இயற்கை சூழ்நிலையையும் சாதகமாக்கி, தேவ நாமம் மகிமைப்படும்படி திருமணம் நடந்து முடிக்க தேவன் கிருபை செய்தார். எங்களை சாட்சியாக நிறுத்தின தேவாதி தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

**சகோதரி. மல்லிகா — ஈரோடு**

கடந்த நாட்களில் என் மகள் குடும்ப ஆசீர்வாதத்திற்காகவும், அவளுடைய வேலைக்காகவும் ஜெபிக்குமாறு கடிதம் மூலம் உங்களுக்கு எழுதி அனுப்பினேன். நீங்களும் எங்கள் குடும்பத்திற்காகவும், தேவ ஆசீர்வாதத்திற்காகவும், மகளின் வேலைக்காகவும் ஜெபித்து, வாக்குத்தத்த வசனத்தோடு பதில் கடிதம் அனுப்பினீர்கள். தேவன் ஜெபத்திற்குப் பதில் தந்து கவர்மெண்ட்டில் நர்ஸ் வேலை கிடைக்க கிருபை செய்தார். நாங்கள் சிறுமைப்பட்ட நாட்களுக்கும், துன்பத்தை கண்ட வருஷங்களுக்கும் தக்க தேவன் எங்களை மகிழ்ச்சியினால் நிரப்பினார். எல்லா மகிமையும் அவருக்கே உண்டாவதாக.

**சகோதரர். ராஜேந்திரன் – திண்டுக்கல்**

இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் மூலம் Youtube காலைதோறும் ஒளிபரப்பாகிற இயேசுவை தினம் பார்ப்போம் நிகழ்ச்சியை நான் தொடர்ந்து பார்த்து வருகிறேன். இந்த நிகழ்ச்சி மூலம் தினந்தோறும் தேவன் என்னோடு பேசுகிறார். காலையில் எழுந்தவுடன் தேவனைத் துதித்து, தேவ வார்த்தையைக் கேட்கும் போது மிகுந்த ஆறுதலாகவும், ஆசீர்வாதமாகவும் எனக்கு இருக்கிறது. அருமையான சகோதரரையும், சகோதரியையும் தேவன் இந்த ஊழியத்தில் இன்னும் வல்லமையாக எடுத்துப் பயன்படுத்த வேண்டும், என்னைப் போன்று இன்னும் அநேக மக்களுக்கு இந்த நிகழ்ச்சியை தேவன் ஆசீர்வாதமாக மாற்றுவாராக.



www.jesuslives.in

# வாருங்கள் இணைந்து ஊழியம் செய்வோம்!

## உடன் ஊழியர்கள் தேவை!

காலி பணியிடங்கள்

| | |
|---|---|
| **ADMINISTRATIVE** OFFICER'S | 2 |
| **Manager** Ministry Operation's | 1 |
| **Office Assistant's** With Driving Skill | 2 |
| **Cook** To cook for 20 Members | 2 |
| **Volunteer** Prayer Warriors | 15 |

**இப்பொழுதே! விண்ணப்பியுங்கள்**

**Whatsapp**
+91 7825 04 7825
+91 9498 00 0449



www.jesuslives.in

இயேசு வாழ்கிறார் மீடியா துறைக்கு

# வேலைக்கு ஆட்கள் தேவை

இடம்
மதுரை
சென்னை
திண்டுக்கல்

## Available Positions :

#On Site

**MANAGER - MEDIA OPERATIONS**

Should take care of the entire media operations with vast knowledge in media and digital media with latest technology implementation. Should be Expert in Team handling and the projects.

#Hybrid

**GRAPHIC DESIGNER**

Should have vast knowedgle in Corel Draw,Adobe in design and illustrator. Should have the idea of print media and good work skill on digital platform desgin work as per the platforms

#Hybrid

**CONTENT WRITER**

Should have a biblical knoweldge to write the content both in print media as well as in the Digital Platfoms. Excellent wrtining and communicating skill needed.

## Available Positions :

#On Site

**PROGRAM PRODUCER / DIRECTOR**

Planning and creating new program as per the Inputs and need to have a vast knowledge in creating content from production to broadcasting . Knowledge in Target Audience is a must.

#Hybrid

**VIDEO EDITOR**

Should have vast knowedgle in Premire Pro, Davinci Resolve and FCP X. With creative Edit Skill using the lastest Desinging skill as per the broadcast Standard

#On Site

**SOUND ENGINEEER**

Should have a work experience in Live sound Reinforcment and should handle the Aduio Studio in addtion the Live Broadcasting in realtime.

## Available Positions :

#Hybrid

**MOTION GRAPHICS DESIGNER**

Should have vast knowedgle in After effects, Premiere pro and photoshop with good creative skill. Using the realtime graphics and virtual studio idea will be a plus.

#On Site

**CAMERAMAN**

Should Operate the camera with lighting and audio knowledge.Ready to learn and implement the latest technology

#On Site

**PHOTOGRAPHER**

Able to handle the DSLR and to work on the lightroom. Good Knowdelge with Creative Skill. Four Wheel Driving Experi-ence Needed.

Christian Candidates Having a Zeal to Work in a Christian Organisation can APPLY

**இப்பொழுது விண்ணப்பியுங்கள்**

https://jesuslives.in/careers/

OR

Email : connect@dprince.in

OR

Whatsapp : +91 7825 04 7825

OR

Whatsapp : +91 9498 00 0449

- * Any UG/PG Candidates with respective Skill
- * Bsc Visual Commuication or Any Media Studies or Experience in the respective Field.
- * Experienced Staffs will be given Good Remuneration.
- * Food And Accomodation will be provided.
- * Male & Female can Apply.
- * Fresher are welcomed whereas will undergo 3 months training without stipend.

நடப்பு
★★★★★★
செய்திகள்

# செவ்வாய் கிரகத்தின் காந்த மண்டலத்தில் தனி அலைகள் இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

செவ்வாய் கிரகத்தை பற்றி ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இந்நிலையில் செவ்வாய் கிரகத்தை சுற்றி தனி அலைகள் இருப்பதற்கான முதல் ஆதாரத்தை இந்திய விஞ்ஞானிகள் குழு கண்டறிந்துள்ளது. நாசாவின் செவ்வாய் வளி மண்டலம் மற்றும் நிலையற்ற பரிணாமம் (மேவன்) விண்கலத்தில் லாங்முயர் ஆய்வு மற்றும் அலைகள் கருவி மூலம் பதிவு செய்யப்பட்ட உயர் தெளிவுத்திறன் கொண்ட மின்சார புல தரவுகளின் உதவியுடன் செவ்வாய் காந்த மண்டலத்தின் உள்ள தனி அலைகளை நவி மும்பையை சேர்ந்த இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஜியோ மேக்னடிசம் (ஐ.ஐ.ஜி) ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து அறிக்கை தாக்கல் செய்தனர். இந்த தனி அலைகள் செவ்வாய் காந்த மண்டலத்தில் உள்ள தனித்த மின்புல ஏற்ற இறக்கங்கள் ஆகும். அவை துகள் ஆற்றல், பிளாஸ்மா இழப்பு மற்றும் அலைத்துகள் இடைவினைகள் மூலம் போக்குவரத்தை கட்டுப்படுத்துகின்றன. இதுகுறித்து அந்த ஐ.ஐ.ஜி.நிறுவனத்தின் விஞ்ஞானி பாரதி காகட் கூறுகையில், பொதுவாக எந்த விண்வெளி நிறுவனமும் தனது பேலோடில் இருந்து தரவை 6 மாதங்களுக்கு தக்க வைத்து ஆய்வு செய்யும். அதன் பிறகு கொள்கையின்படி பொது களத்தில் தரவுகளை வைக்க வேண்டும். நாசா அந்த மேவன் தரவை பொது டொமைனில் வைத்த போது எங்களது குழு அதனை படித்தது. 3 மாத பகுப்பாய்வுக்கு பிறகு செவ்வாய் கிரகத்தின் காந்த மண்டலத்தில் தனி அலைகளை கண்டுபிடித்தோம் என்றார். இந்த கண்டுபிடிப்புகள் தி அஸ்ட்ரோபிசிகல் ஜர்னலில் வெளியிடப்பட்டுள்ளது. இது 2015-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் செவ்வாய் கிரகத்தை சுற்றி 5 பயணங்களின் போது மேவன் விண்கலத்தால் கவனிக்கப்பட்ட 450 தனி அலை துடிப்புகளின் பகுப்பாய்வை கூறுகிறது.



www.jesuslives.in



# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | |
|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST |
| BRANCH | : KOCHADAI MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA |
| A/C.NO | : 493902010001022 |
| IFSC CODE | : UBIN0549398 |

| | |
|---|---|
| A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : MADURAI |
| BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UTIB0001765 |

## 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

## 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

## 5) மணியார்டர்(E.M.O) :

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

செம்பட்டியில்

# இயேசுவின் பாதத்தில்

பிப்ரவரி

# 10

வெள்ளிக்கிழமை

@10:00AM



இடம்

வானத்தின் வாசல்,
எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்

குறிப்பு : கூட்டம் முடிந்த உடன் அனைவருக்கும் அன்பின் உணவு வழங்கப்படும்

# ஆசீர்வாத உபவாச ஜெபம்

பிப்ரவரி

# 11

சனிக்கிழமை

@10:00AM

**உங்கள்**

குடும்பத்திற்காக!, அற்புதத்திற்காக!, விடுதலைக்காக!, சுகத்திற்காக! மன்றாட்டு ஜெபம்

செம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து 11.30AM மணி வரைக்கும் ஜெப மையத்திற்கு வாகன வசதி உண்டு

தொடர்புக்கு 94980 00449, 94428 00449

இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்

www.jesuslives.in



மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்
மதுரையில் எழுப்புதல்
உபவாச
ஜெபம்
Pastor.
L.JOSEPH
Evangelist.
L.VINCENTRAJ
Evangelist.
KALAVINCENTRAJ
18
பிப்ரவரி
சனிக்கிழமை
9:30am to 2:00pm
மாதம் தோறும் 3-வது சனிக்கிழமை
இடம்
இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம்,
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம்,
PRC Depot அருகில், மதுரை
தொடர்புக்கு
94428 00449, 94428 00447
உங்கள் யாவரையும்
அன்போடு அழைக்கின்றோம்